بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 15/04/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 16**
**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் மலைகள் மீது விழுந்திருந்தால், அவை மண்ணோடு மண்ணாகிப் போயிருக்கும். ஆனால், அன்னாருக்குத் தூதர்களைப் போன்ற பொறுமை வழங்கப்பட்டது."**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவிற்கு முந்தைய ஜுமுஆ குத்பாவில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் முர்தத்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களுக்கு, அவர்கள் மார்க்கத்தை விட்டுச் சென்றதனால் தண்டனை வழங்கவில்லை; மாறாக, அவர்கள் செய்த கிளர்ச்சி மற்றும் போரின் காரணமாக தண்டனை வழங்கினார்கள் என்பது பல்வேறு ஆதாரங்களின் ஒளியில் நிரூபணமாகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இந்த முர்தத் ஆன விஷயத்துக்குக் கிளர்ச்சி மற்றும் கட்டுபடாமை என்று விளக்கம் அளித்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆன பிறகு, இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் பல இன்னல்கள் வந்தன. பல நயவஞ்சகர்கள் முர்தத் ஆகிவிட்டனர். இட்டுக்கட்டுபவர்களின் ஒரு குழு நபித்துவ வாதம் புரிந்து விட்டது. அறிவீனர்களான, தீயநடத்தையுடைய மக்கள் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர் முஸைலமா கஸ்ஸாபோடு சென்று சேர்ந்து கொண்டனர். குழப்பம் வெடித்தது. முஃமின்கள் மீது ஒரு கடுமையான நடுக்கம் ஏற்பட்டது. இப்படிப்பட்ட தருணத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக நியமிக்கப்பட்டார்கள்.

**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** எனது தந்தையார் கலீஃபாவாக நியமிக்கப்பட்ட போது, துவக்கத்திலேயே அன்னார் எல்லாவிதமான குழப்பங்களும் அலை போல் மோதுவதையும், பொய் நபித்துவ வாதம் புரிந்தவர்களின் பணி மும்முரங்களையும், முர்தத் ஆன நயவஞ்சகர்களின் கிளர்ச்சியையும் பார்த்த போது, அன்னாருக்கு எந்த அளவு துன்பங்கள் ஏற்பட்டன என்றால், அந்த அளவு (துன்பங்கள்) மலைகள் மீது விழுந்திருந்தால் அவை மண்ணோடு மண்ணாகிப் போயிருக்கும். ஆனால், அன்னாருக்குத் தூதர்களைப் போன்ற பொறுமை வழங்கப்பட்டது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

எதுவரை எனில், அல்லாஹ்வின் உதவி வந்தடைந்தது. பொய் நபிகள் கொல்லவும்; முர்தத்துகள் அழிக்கவும் பட்டனர். குழப்பங்கள் அகற்றப்பட்டன. அல்லாஹ் முஃமின்களைப் பேரழிவிலிருந்து காப்பாற்றி, அவர்களின் அச்சத்தின் நிலையை அமைதி(நிலை)யாக மாற்றிவிட்டான். மார்க்கத்தை உறுதிப்படுத்தினான். ஓர் உலகையே உண்மையில் நிலைத்திருக்கச் செய்துவிட்டான். குழப்பவாதிகளின் முகங்களைக் கருகச் செய்துவிட்டான். தனது வாக்குறுதியை நிறைவேற்றினான். அந்தத் துன்பத்திற்குப் பிறகு, முஃமின்களின் உள்ளங்கள் ஒளிர்ந்தன; முகங்கள் பொலிவுற்றன. அவர்கள் அன்னாரை ஓர் அருளுக்குரிய மனிதராகவும் நபிமார்களைப் போன்று ஆதரவு வழங்கப் பெற்றவராகவும் கருதி வந்தார்கள். இவ்வனைத்தும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உண்மை மற்றும் ஆழமான நம்பிக்கையினால் ஏற்பட்டது.

கிளர்ச்சி செய்பவர்களை வேரறுப்பதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படையைப் (பல பகுதிகளாகப்) பிரித்தார்கள். பதினோறு படைத்தளபதிகளுக்கு இஸ்லாமிய கொடியைக் கொடுத்து, பல்வேறு பகுதிகளுக்குப் போர்க்களங்களுக்கு அனுப்பினார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்குத் துலைஹா பின் குவைலத் மற்றும் பத்தாஹ் மாலிக் பின் நுவைராவுடனும், அபூஜஹ்லின் மகன் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களுக்கு முஸைலமாவுடனும், ஹஸ்ரத் முஹாஜிர் பின் அபூ உமைய்யா (ரலி) அவர்களுக்கு அன்ஸீயுடைய படைகள், கெய்ஸ் பின் மக் ஷூஹ் மற்றும் கிந்தாஹ்வுடனுடம், ஹஸ்ரத் காலித் பின் சயீத் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு ஹம்கத்தைனிலும், ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு குஸாஆ, வதீஆ மற்றும் ஹாரிஸுடைய கூட்டங்களுடனும், ஹஸ்ரத் ஹுஸைஃபா பின் முஹ்ஸின் ஃகல்ஃபானீ (ரலி) அவர்களுக்கு தபா வாசிகளுடனும், ஹஸ்ரத் உர்ஃபஜா ஹர்ஸீமா (ரலி) அவர்களுக்கு மஹ்ராவிலும், ஹஸ்ரத் ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களுக்கு யமாமா மற்றும் குஸாஆவிலும், ஹஸ்ரத் துரைஃபா பின் ஹாஜிஸ் (ரலி) அவர்களுக்கு பனூ ஸுலைம் மற்றும் ஹவாஸனுடனும், ஹஸ்ரத் ஸுவைத் பின் முக்ரன் (ரலி) அவர்களுக்கு திஹாமாவிலும் மற்றும் ஹஸ்ரத் உலா பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்களுக்கு பஹ்ரைனிலும் கிளர்ச்சியாளர்களோடு போரிடுமாறு கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒவ்வொரு படைக்குழுவின் தளபதிக்கும், 'அவர்கள் கடந்து செல்லும் இடங்களில் எல்லாம் உள்ள ஆற்றல் படைத்த முஸ்லிம்களைத் தம்முடன் அழைத்துக் கொள்ளுமாறும், சில ஆற்றல் படைத்த மக்களை அங்கேயே தங்களது பகுதிகளைப் பாதுகாப்பதற்காக விட்டுவிடுமாறும்' கட்டளையிட்டார்கள்.

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த பங்கிடுதலைப் பற்றிக் குறிப்பிட்டவாறு ஓர் எழுத்தாளர் எழுதுகிறார்:** இந்தப் போர்களுக்காக 'ஸுல் கிஸ்ஸா' எனும் இடம் படை மையமாகக் கொள்ளப்பட்டது. இங்கிருந்து ஒருங்கமைக்கப்பட்ட இஸ்லாமிய படைகள் முர்தத் ஆகும் திட்டத்தை அடியோடு ஒழிப்பதற்காகப் பல்வேறு பகுதிகளுக்குப் பயணமாகின. படைகளைப் பிரித்தல் மற்றும் அவற்றின் இடங்களுக்கான எல்லைகளை வரையறுத்தல் ஆகியவற்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆழமான புவியியல் ஞானம் கொண்டிருந்தார்கள் என்பதும் அரபு நாட்டின் வழிகளைப் பற்றி நன்றாக அறிந்திருந்தார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. படைகளுடனான

தொடர்புகளும் மிகவும் நுணுக்கமாக இருந்தன. எல்லாப் படைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பில் இருந்தன. இது கிலாஃபத்தின் முக்கிய வெற்றிகளில் ஒன்றாக இருந்தது. ஏனெனில், இந்தப் படைகளுக்குள் தலைமைத் திறனோடு சேர்ந்து அழகிய அமைப்பும் இருந்தது. முர்தத்கள் தத்தமது பகுதிகளில் பிரிந்து கிடந்தனர். அவர்கள் சில மாதங்களில் எல்லா முஸ்லிம்களையும் அழித்து விடலாம் என்று கற்பனை செய்து கொண்டிருந்தனர். எனவே தான், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தீடிரென்று அவர்களின் கம்பீரத்தையும் ஆற்றலையும் ஒடுக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்களின் குழப்பம் அதிகரிப்பதற்கு முன்னரே அவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுத்தார்கள். அவர்களுக்குத் தலைதூக்குவதற்கும் முஸ்லிம்களுக்குத் துன்பமிழைப்பதற்கும் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை.

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சார்பாகத் தலைவர்கள் நியமிக்கப்பட்டது குறித்து பல்வேறு விஷயங்களை எடுத்துரைத்த வண்ணம் பிறிதோர் எழுத்தாளர், டாக்டர் அலீ முஹம்மத் ஸல்லாபீ அவர்கள் எழுதுகிறார்கள்:** சித்தீக்கே அக்பர் (ரலி) அவர்கள் கிலாஃபத் தலைமையகமான மதீனாவைப் பாதுகாப்பதற்காகப் படையின் ஒரு பகுதியைத் தம்மிடம் வைத்துக் கொண்டார்கள். இவ்வாறே அரசியல் விவகாரங்களில் கருத்தும் ஆலோசனையும் தெரிவிப்பதற்காகப் பெரிய சஹாபாவின் ஒரு குழுவைத் தம்மிடம் வைத்துக் கொண்டார்கள். தளபதிகளுக்கு, 'முர்தத் ஆனதால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஆற்றல் படைத்த முஸ்லிம்களை உங்களுடன் இணைத்துக் கொள்ளுங்கள். மேலும், அந்தப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காக சில மக்களை அங்கு நியமித்து விடுங்கள்' என்று கட்டளையிட்டார்கள்.

முர்தத்களோடு போரிடுகையில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் اَلْحَرْبُ خُدْعَةٌ என்ற விதியைக் கடைபிடித்தார்கள். அதாவது, படையின் நோக்கமாக ஒன்றை வெளிப்படுத்துவார்கள். ஆனால், நோக்கங்களோ வேறு ஏதாவது இருக்கும். இவ்வாறு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தலைமையில் அரசியல் திறமை, அனுபவ ஞானம், உறுதியான அறிவு, இறைவன் வழங்கும் வெற்றி மற்றும் உதவி ஆகியவை வெளிப்படையாகத் தெரிகின்றன.

இந்த சந்தர்ப்பத்தில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அரபு கோத்திரங்களின் பெயருக்கு ஒன்றும்; படைத்தளபதிகளுக்கு வழிகாட்டல் வழங்குவதற்காக ஒன்றும் என இரண்டு கடிதங்களையும் எழுதினார்கள். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது உன்னதமான நூல் 'ஸிர்ருல் கிலாஃபா' வில், அரபு கோத்திரங்களுக்கு எழுதப்பட்ட கடிதத்தைப் பற்றிக் குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்:** நாம் இங்கு அந்தக் கடிதத்தைப் பதிவு செய்வது பொருத்தமானதாக இருக்கும். இவ்வாறு, இந்தக் கடிதத்தைப் பற்றித் தெரிந்து கொள்பவர், இறைவனின் கண்ணியத்திற்குரிய விஷயங்களை வழக்கப்படுத்துவதிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் எல்லா சுன்னத்களையும் தற்காப்பதிலும் சித்தீகே அக்பர் (ரலி) அவர்களுக்கு இருந்த உறுதித்தன்மையைப் பார்த்து ஈமானிலும் முன்னோக்குப் பார்வையிலும் முன்னேற்றம் அடையலாம்.

"இந்தக் கடிதம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கலீஃபா அபூபக்ர் தரப்பிலிருந்து எல்லா முக்கியஸ்தர்களுக்கும் பொது மக்களுக்கும் எழுதப்படுகிறது... இதற்குப் பிறகு, தெளிவாகட்டும்! அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மத்

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைத் தன்னிடமிருந்து உண்மையை வழங்கி, தனது படைப்பினங்களை நோக்கி, நற்செய்தி வழங்குபவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும், அல்லாஹ்வின் பால் அவனது கட்டளையால் அழைப்பவராகவும், ஓர் ஒளிபெறச் செய்யக்கூடிய சூரியனாகவும், உயிருள்ள மனிதனை அச்சுறுத்துவதற்காகவும், நிராகரிப்பாளர்கள் மீது அத்தாட்சி முழுமை பெறுவதற்காகவும் அனுப்பினான்.

எவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டாரோ அவருக்கு அல்லாஹ் உண்மையுடன் நேர்வழி வழங்கினான். எவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட்டும் முகந்திருப்பி விட்டாரோ அவருடன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர் விரும்பியோ நிர்பந்தத்திற்கு உள்ளாகியோ இஸ்லாத்தில் வந்து விடும் வரை போரிட்டார்கள்.

பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றிய பிறகு, உம்மத்துக்கு நன்மையை நாடிய பிறகு, தம் மீதிருந்த பொறுப்புகளை நிறைவேற்றிவிட்ட பிறகு, அல்லாஹ் அன்னாருக்கும் முஸ்லிம்களுக்கும் தான் இறக்கிய மறையில் இந்த விஷயத்தை மிகவும் தெளிவுபட எடுத்துரைத்துவிட்டான்:

.....நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்ளுமாறும், உங்களுக்காக அல்லாஹ்விடம் வைக்கப்பட்டுள்ள அந்த நற்பேற்றைப் பெறுவதற்கு(முயற்சி செய்யுமாறு)ம், உங்களுடைய நபி (ஸல்) அவர்கள் உங்களிடம் கொண்டு வந்த அந்தப் போதனையின் படி செயல்படுமாறும், நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் காட்டப்பட்ட வழியில் சென்று நேர்வழி பெறுமாறும், அல்லாஹ்வின் மார்க்கத்தை உறுதியுடன் பற்றிப் பிடித்திருக்குமாறும் நான் உங்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறேன்.

ஏனெனில், அல்லாஹ் நேர்வழி காட்டாத ஒவ்வொரு நபரும் வழிதவறியவர் ஆவார். அவன் காப்பாற்றாத ஒவ்வொரு நபரும் சோதனையில் சிக்குவார். அவன் உதவிடாத ஒவ்வொரு நபரும் தோழரும் உதவியாளரும் அற்றவர் ஆவார். எனவே, அல்லாஹ் எவருக்கு நேர்வழி காட்டுகிறானோ அவரே நேர்வழி பெற்றவர். எவரை அவன் வழிதவற விட்டுவிடுகிறானோ அவர் வழிதவறியவர் ஆவார்... அவர் இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளாதவரை, அவர் உலகில் செய்த எந்த அமலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும், மறுமையிலும் அவரிடமிருந்து எந்தக் கைமாறும் ஈட்டுத் தொகையும் பெறப்பட மாட்டாது. உங்களில் சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு, அதன் படி செயல்பட்ட பிறகு, அல்லாஹ்வை ஏமாற்ற எண்ணி, அவனது விவகாரங்களில் அறிவீனத்தை மேற்கொண்டு, ஷைத்தானின் பேச்சைக் கேட்டவாறு தமது மார்க்கத்தை விட்டு விலகி விட்டார்கள் என்ற விஷயம் எனக்குத் தெரிய வந்துள்ளது.

நான் முஹாஜிர்கள், அன்ஸார் பெருமக்கள் மற்றும் நற்செயல்கள் ஆற்றிய வண்ணம் கட்டுப்படக்கூடிய தாபிஃமார்களின் படைக்கு இன்ன நபரைத் தலைவராக நியமித்து உங்களிடம் அனுப்பியுள்ளேன். மேலும், நான் அவருக்கு இவ்வாறு ஆணையிட்டுள்ளேன்:

“நீங்கள் யாருடனும் போர் செய்யக்கூடாது. ஒருவருக்கு அல்லாஹ்வின் தூதுச் செய்தியின் பால் அழைப்பு விடுத்து விடாத வரை அவரைக் கொல்லக்கூடாது. பிறகு, அந்தத் தூதுச் செய்தியை ஏற்றுக் கொண்டு, சாட்சி

பகர்ந்து, திருந்தி, நற்செயல் ஆற்றினால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதில் அவருக்கு உதவி செய்ய வேண்டும். எவர் நிராகரித்தாரோ அவருடன் இந்த விஷயத்தில் போர் புரிய வேண்டும். எவர்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொள்கிறீர்களோ அவர்களில் ஒருவரையும் விட்டு வைக்கக்கூடாது. ஒன்று அவர்களை நெருப்பால் எரித்து விட வேண்டும். மேலும், எல்லா விதத்திலும் அவர்களைக் கொல்ல வேண்டும். பெண்களையும் குழந்தைகளையும் சிறைபிடிக்க வேண்டும். எவரிடமிருந்தும், அவர் இஸ்லாத்தை ஏற்பதை விடக் குறைவான எந்தப் பொருளையும் பெறக்கூடாது. பிறகு, எவர் உங்களுக்குக் கட்டுப்படுவாரோ அவருக்கு இது சிறந்ததாக இருக்கும். எவர் அதை செய்யவில்லையோ அவரால் அல்லாஹ்வை வலுவிழக்கச் செய்ய முடியாது.''

பிறகு நான் எனது தூதுவர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டேன்: ''நீங்கள் எனது இந்தக் கடிதத்தை அவர்களது ஒவ்வொரு சபையிலும் வாசித்துக் காட்ட வேண்டும். பாங்கு சொல்வதுதான் இஸ்லாத்தை ஏற்றதன் அறிவிப்பாகும். எனவே, முஸ்லிம்கள் பாங்கு சொல்லும் போது அந்த மக்களும் பாங்கு சொல்லி விட வேண்டும். மேலும், (அதற்குப் பிறகு) அவர்களைத் தாக்குவதை நிறுத்தி விட வேண்டும். ஒருவேளை அவர்கள் பாங்கு சொல்லவில்லை என்றால், அவர்களைத் தாக்குங்கள். அவர்கள் பாங்கு சொல்லிவிட்டால், அவர்கள் மீது கடமையானவற்றை அவர்களிடம் கேளுங்கள். அவர்கள் (தர) மறுத்து விட்டால், விரைவாக அவர்கள்மீது தாக்குதல் தொடுத்து விடுங்கள். அவர்கள் ஏற்றுக் கொண்டால், அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.''

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இரண்டாவது கடிதத்தைப் பதினோரு படைத்தளபதிகள் பெயருக்கு எழுதினார்கள். மேலும், எல்லா அமீர்மார்களுக்கும் இவ்வாறு கட்டளையிட்டார்கள்: ''எல்லா விவகாரத்திலும் அகத்திலும் புறத்திலும் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும். ஆற்றல் உள்ள அளவு அல்லாஹ்வுக்கான விவகாரங்களில் கடும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ்வை விட்டு முகந்திருப்பி, இஸ்லாத்தை விட்டும் விலகி, ஷைத்தானிய ஆசைகளை மேற்கொண்ட மக்களுடன் போர் புரிய வேண்டும். எல்லாவற்றிற்கும் முதலாக அவர்கள் மீது அத்தாட்சியைப் பூர்த்தி செய்ய வேண்டும். அவர்களுக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுக்க வேண்டும். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டால், அவர்களுடன் போர் புரிவதை நிறுத்தி விட வேண்டும்.

பிறகு, அந்த மக்களுக்கு அவர்களின் உரிமைகளையும் கடமைகளையும் பற்றிக் கூற வேண்டும். அவர்கள் மீது கடமையானவற்றை அவர்களிடமிருந்து பெற வேண்டும். அவர்களின் உரிமைகளை அவர்களுக்கு செலுத்த வேண்டும். நிராகரித்தவரோடு போர் புரிய வேண்டும். அல்லாஹ் (உங்களுக்கு) அந்த மக்கள் மீது வெற்றியை வழங்கினால், அவர்கள் பயங்கரமான முறையில் நெருப்பைக் கொண்டும் போர் ஆயுதங்களைக் கொண்டும் கொல்லப்பட வேண்டும்.''

**டாக்டர் அலீ முஹம்மத் ஸல்லாபீ அவர்கள் எழுதுகிறார்கள்:** இந்தக் கடித்தத்தில் கிளர்ச்சி செய்த முர்தத்துகளை நெருப்பில் எரித்துவிடுமாறு கூறப்பட்டுள்ளது. எவருக்கும் எரிக்கும் தண்டனை கொடுப்பது ஆகுமானதல்ல. நெருப்பைக் கொண்டு தண்டனையளிப்பது அல்லாஹ்விற்கு மட்டுமே உரித்தானது. ஆனால், இங்கு அவர்களை எரிப்பதற்கான கட்டளை வழங்கப்பட்டதன் காரணம், அந்தத் தீய நடத்தையுடையவர்கள் ஈமான் கொண்டவர்களுடன் இவ்வாறே நடந்து கொண்டார்கள். எனவே, இது பழிவாங்கும் விதமாக இருந்தது.

அல்லாஹ் திருக்குர்ஆனிலும் இதையே கூறியுள்ளான். அதாவது, எவ்வாறு ஒருவர் செய்கிறாரோ, அவரைப் பழிவாங்குவதற்காக அவருக்கு அதற்கு ஏற்பவே தண்டனை கொடுங்கள். கிளர்ச்சி செய்தவர்கள் முஸ்லிம்களை எரிப்பது மற்றும் அவர்களைக் கொடூரமான முறையில் கொலை செய்வது ஆகிய பாவங்களைச் செய்தனர். எனவே, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்கள் முஸ்லிம்களுக்கு செய்தது போன்றே அவர்களைக் கொலை செய்யுமாறும், அவ்வாறே அவர்களுடன் நடந்து கொள்ளுமாறும் கட்டளையிட்டார்கள்.

**இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:** இந்த நற்குறிப்பு இனியும் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ். ரமலானில் மற்ற குத்பாக்களும் இடையில் வந்து கொண்டே இருக்கும். அதனால், நேரம் எடுக்கலாம். ஆனால், எவ்வாறு இருப்பினும், அடுத்து இது சம்மந்தமாக வரக்கூடிய குத்பாவில் விபரம் எடுத்துரைக்கப்படும்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهُ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ الله رحمكم الله اِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னீ)**